வில்லை. ஆனால் எனக்கு இருக்கிற ஆசை, உங்களுக்கு இருக்கிற ஆசையைவிட அதிகமாக இல்லாவிட்டாலும் குறைவாக இல்லை. இந்தத் துறை நல்ல நிர்வாகம் உள்ள துறையாக மக்களுக்குப் பணி செய்கிற துறையாக ஆக்கப்பட வேண்டுமென்ற கவலை உங்களுக்கு இருக்கிறதைவிட எனக்கும் இந்த அரசுக்கும் குறைவாக இல்லை என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் எங்களுக்கு சொல்கிறபோது இன்னின்ன இடத்தில், இன்னின்ன தவறுகள் நடக்கின்றன என்று சொல்ல வேண்டும். நான் ஒரு அதிகாரியைக் கூப்பிட்டு ஆய்வு செய்கிறபோது நீ ஏன் இதை இப்படி செய்கிறாய் என்று கேட்பதற்கும், என்னை பலப்படுத்துவதற்கும், என்னைக் கொஞ்சம் விவரம் தெரிந்தவனாக ஆக்குவதற்கும் அது உதவும். அதிகாரியைக் கூப்பிட்டு ஏன் இதை செய்யவில்லை என்று கேட்டால் அப்பொழுதுதான் செய்வேன் அல்லது செய்யவில்லை என்று சொல்ல முடியும். ஆகவே, என்னைக் கொஞ்சம் விவரம் தெரிந்தவனாக ஆக்குவதற்கு எங்கெங்கே தவறு நடக்கிறது என்று என்னிடத்தில் சொன்னால் நான் அதை மறுபடியும் கேட்டு அதை எல்லாம் தெரிவிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 363. திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

363—

புரசைத் தொகுதியில் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் மேல்நிலைப் பள்ளிகள்

*10397—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புரசைத் தொகுதியில் அரசு அங்கீகாரம் அளித்துள்ள தனியார் மேல்நிலைப்பள்ளிகள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

38 பள்ளிகள்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஏ. எம்.எட். படித்து மேல்நிலைப் பள்ளியில்

1993 ஏப்ரல் 16]

பணிபுரியும் ஆசிரியர், முன்பு பி.யு.சி. படிக்க காலேஜுக்கு போன மாணவர்கள், பிளஸ் 1 படிக்க மேல்நிலைப் பள்ளிக்கு போவதில் காட்டும் தயக்கத்தினைப் போக்க மேல்நிலை பள்ளியில் உள்ள பிளஸ் 1, பிளஸ் 2-ஐ மாத்திரம் ஜூனிய காலேஜ் ஆக பெயர்மாற்றம் செய்ய அரசு முன்வருமா? அவ்வாறே, காலேஜில் பணிபுரியும் லெக்சரர்ஸ் காலேஜ் தகுதியான எம்.ஏ.வரையிலும், அதற்கு மேலே பி.எட், எம்.எட். படித்து மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களை லெக்சரர்ஸ் என பெயர்மாற்றம் செய்து அவர்களையும் கௌரவிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரங்கநாதன், உங்கள் தொகுதியில் எத்தனை மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன என்பதுதான் வினா. நீங்கள் அதிலே வேலை பார்க்கின்றவர் களுக்கு எல்லாம் எப்படி எப்படி டெசிக்னேசன் இருக்க வேண்டும் என்பதை எல்லாம் இங்கே கேட்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன். இது மாநில அரசு நினைத்து செய்த காரியங்கள் அல்ல. தேசிய அளவிலே குழு போட்டு, நிபுணர்களை வைத்து, குறிப்பா லட்சுமணசாமி முதலியார் குழு என்று அந்தக் காலத்திலே நேரு அவர்கள் இருந்தபோது அமைக்கப்பட்ட, அந்தக் குழுவின் பரிந்துரையின்பேரில்தான் பின்னால் வந்த அரசுகளும் அதை ஆதரித்து, அந்த அடிப்படையில் தேசிய கல்விக் கொள்கை ஒன்றை வகுத்து, அதைத்தான் இன்றையதினம் தமிழ்நாடு முழுமையாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. டெல்லியிலே நடைபெறும் ஒவ்வொரு மாநாட்டிலும் மற்ற மாநிலங்களும் இதைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார் கள். இந்த ஆண்டிலேயிருந்து கேரள அரசும் நம்முடைய இந்த முறையை பின்பற்ற ஆரம்பித்திருக்கிறார்கள். இதிலே மாண்புமிகு உறுப்பினர் கவனிக்க வேண்டிய ஒன்று, 11—வது 12—வது படிக்கின்ற மாணவர்களுக்கு, அந்த வயது உள்ள மாணவர்களுக்கு லெக்சர் பண்ணி டீச் பண்ணுவது சரியா, பயிற்சிப் பெற்ற ஆசிரியர்களை வைத்து சொல்லித்தர வேண்டுமா, பயிற்சிப் பெறாத விரிவுரையாளர்கள் சொல்லித் தர வேண்டுமா என்பதுதான் மிக முக்கியமான ஒன்று. ஆகவே, அறிஞர் பெருமக்களுடைய கருத்து, பயிற்சிப்பெற்ற ஆசிரியர்கள் வகுப்பறையிலே கல்வி போதிக்கிற முறை மூலமாக 11, 12வது வகுப்பு, அந்த வயதுள்ள மாணவர்களுக்குச் சொல்லி தந்தால்தான் நல்லது என்ற கருத்தை, இந்த முறையை கொண்டு வந்திருக்கிறோம். கடந்த கால அனுபவம் இது மிகச் சிறந்த முறை என்பதையும், மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது என்பதையும் நான் பெருமை டன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலமான ஆந்திரா, கர்நாடகாவில் எல்லாம் ஜுனியர் காலேஜ் என்று பிளஸ் 1, பிளஸ்2-ஐ அழைக்கிறார்கள். அதேபோல மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களை அவர்கள் நடத்தும் பிளஸ் 1, பிளஸ் 2 தவிர 9-வது 10-வது வகுப்புகளுக்கும் பாடம் சொல்லித்தரச் சொல்லி வற்புறுத்தப் படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பற்றாக்குறையாக உள்ள சூழ்நிலையில் அந்த ஆசிரியர்களை 11-வது 12வது வகுப்புகளிலே போதிய வேலைப்பளு இல்லாத போது அவ்வாறு பயன் படுத்துவதில் எந்தவித தவறும் இல்லை. ஜுனியர் காலேஜ் பற்றி நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பி.யு.சி. இருந்த போது தேர்ச்சி விகிதம் 40 சதவிகிதமாக இருந்தது. இப்பொழுது ஹையர் செகண்டரி ஸ்கூல்ஸ் என்று வந்ததற்குப் பிறகு 65 சதவிகிதத்திற்கு பக்கத்தில் அது வந்திருக்கிறது. இப்பொழுது கர்நாடகத்தில் அதே பி.யு.சி. இருக்கிற ஜீனியர் காலேஜ்களில் பழைய 40 சதவிகிதம் தேர்ச்சி விகிதம்தான் இருக்கிறதே தவிர முன்னேறவில்லை. 40–க்கும் 65–க்கும் இருக்கிற அந்த 25 சதவிகிதம் வித்தியாசம் என்பது பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தான் பெரும்பான்மையாக இருப்பார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் ஒரு சமுதாய மறுமலர்ச்சிக்கு இந்த முறை மிகச் சிறந்த முறையாக இருக்கிறது. அதிலே நாம் வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்பது மட்டுமல்ல. நான் முன்பே கூறியிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் 18 சதவிகிதம்கூட பெறாமல் இருந்த நிலைமை மாறி, இன்றைக்கு ஒப்பன் கோட்டாவில் ஒரு சதவிகிதம் பெறுகின்ற அளவுக்கு அவர்களுடைய தேர்ச்சி விகிதம் உயர்ந்திருக்கிறதென்றால், அதற்குக் காரணம் ஹையர் செகண்டரி பள்ளிகள்தான்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 364, திரு. து. மூர்த்தி, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சா